DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE/
SUBORDINATE JUDGE, MANAMADURAI

| | |
|---|---|
| Case No. | S.C.No.12/2022 |
| Police Station | Thiruppachethi P.S |
| Deposition of Witness for | LW.3 /PW.3 |
| Name | அங்குத்தாய் |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

**A2, A4 produced. A1, A3 present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 22.12.2023 at 11.16a.m

**முதல் விசாரணை:**

நான் T.வேலங்குளத்தில் வசிக்கிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 குமார் எனது மகன். அ.சா.2 எனது கணவர். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரிகளுக்கும் எங்களுக்கும் இடப்பிரச்சனை சம்பந்தமாக பிரச்சனை இருந்தது. 3 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் இரவு 8.30 மணியளவில் எனது மகன் வீட்டருகே உள்ள தாலிகுளம் ரோட்டில் இயற்கை உபாதை கழிப்பதற்காக சென்ற போது குண்டுமணி என்ற கருப்பசாமி அருவாளை கொண்டு எனது மகனை வலது தோள்பட்டையில் வெட்டினார். மாசாணம் மகன் பூச்சிஇருள்ப்பன் அருவாளை கொண்டு எனது மகனின் தலையில் வெட்டினார். அருண்குமார் அருவாளை கொண்டு எனது மகனின் 2 கைகளிலும், கால்களிலும் வெட்டினார், உடல் முழுவதும் காயம் ஏற்பட்டது. எனது மகன் ரத்தகாயத்துடன் கீழே விழுந்துவிட்டார். எனது மகனின் அலறல் சத்தம் கேட்டு வீட்டிலிருந்த நானும், எனது கணவர், எனது மருமகள் சரண்யா, முனீஸ்வரன் ஓடிசென்று பார்த்த போது எதிரிகள் எங்களை பாாத்தவுடன் ஓடிவிட்டார்கள். 108 ஆம்புலன்ஸ் மூலம் எனது மகனை சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு முதல் சிகிச்சை செய்து விட்டு மேல்சிகிச்க்கைக்காக மதுரை ராஜாஜி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பின்னர் எனது மகன் சரவணா மருத்துவமனையில் சிகிச்சைக்காக 2 நாட்கள்

உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். சரவணா மருத்துவமனையில் இருந்தபோது சார்பு ஆய்வாளர் என் மகனை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார். மருத்துவமனையிலிருந்து விடுபட்டு வீட்டிற்கு வந்தபிறகு காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை இல்லை.**

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது**

**உதவி அமர்வு நீதிபதி**
**மானாமதுரை**